Regd. No. M. 4593. KUDI ARASU 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.
சனி வெளியீடு.

தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 15-12-1945 மார்கழி மீ 1௳ { மலர் 10

# இந்து மதம் ஒரு சூழ்ச்சிக் கூடாரம்

## குடந்தை தோழர் வி. சின்னதம்பி முழக்கம்

[சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் 15-12-45ல் நடைபெற்ற சென்னை மாவட்ட 6-வது "சுயமரியாதை" மாநாட்டில் தலைமைவகித்துப் பேசிய பேருரை]

மாண்புமிக்க தலைவர், பெரியார் அவர்களே! அறிவிற்சிறந்த வரவேற்புக் கழக குழுவினரே! மதிப்பிற்குரிய தாய்மார்களே! தோழர்களே!

இம்மாநாட்டிற்கு தலைமை வகிக்கும் பேற்றினைப்பெறத் தகுதிமிக்க பேரறிஞர் பலர் நம்மிடையிருந்தும், நமதியக்கத் தொண்டனாகிய எனக்கு இச்சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருப்பதை எண்ணுங்கால் இம்மாநாட்டின் வரவேற்புக் குழுவினருக்கு என்பால் உள்ள அன்பு காரணமாயிருக்கவேண்டும், அல்லது இதுவரை நான் இயற்றிவந்த தொண்டு போதாது இன்னும் எதிர்காலத்தில் செயற்கரிய பல பெருந்தொண்டுகளை இயற்ற நான் முற்படுதல் வேண்டும் என்று என்னை ஊக்குவிக்கும் தோரணையில் செய்யப்பட்டதாகவுமிருக்கலாமெனக் கருதுகிறேன். கருத்து இரண்டில் எதுவாயிருப்பினும் நமதருமை இயக்கத்தைப் பொறுத்த அளவு என்னாலியன்ற தொண்டை இயக்க ஆரம்பமுதல், அன்றும், இன்றும் என்றும் செய்துவர என் உள்ளத்தில் அசைவிலாத உறுதி கொண்டுள்ளேன் என்பதை தங்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகிறுடன்



தோழர் வி. சின்னதம்பி

தாங்கள் எனக்களித்திருக்கும் தலைமைப்பதவிக்கு என் மனமார்ந்தநன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளுவதுடன் இன்றைய மாநாட்டின் காரியங்கள் யாவும் வெற்றியிலும் வெற்றியாக முடிவதற்கு தங்களின் அன்பான ஒத்துழைப்பை அளிக்க வேண்டுமாய்த் தங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

### திராவிடர்கள் ஆரியத்திற்கு ஏன் அடிமையானார்கள்

சரித்திர சான்றின்படி சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மத்திய ஆசியாவில் காட்டுமிராண்டிகளாய் திரிந்த ஆரியர்கள் இந்நாட்டிற்கு வந்து, அந்நாளில் சூதுவாதறியாது, ஒரே குலம் ஒன்றே தெய்வம் என்ற உயரிய கோட்பாடுகளுடன் முடிவேந்தர்களாய், இலங்கை, பர்மா, இமயம் வரை தங்களின் நிகரற்ற தோள் வலிமையினால் வீரத்தை நிலைநாட்டி மேல்நாடுகளுடனும் வாணிபம் நடாத்தி, செங்கோலோச்சி வாழ்ந்த நம் திராவிடப் பெருங்குடிமக்களின் மத்தியில் பிழைப்பு நிமித்தம் வந்து புகுந்த ஆரியவஞ்சகர்கள், நம் முடிவேந்தர்களிடம் இடம்பெற்று ஊன்றிக்கொண்டு தங்களின் வஞ்சக வலையாகிய "இந்துமதம்" என்னும் ஒரு பெரும் சூழ்ச்சிக் கூடாரத்தைப் போட ஆரம்பித்து அதன் மத்திய கம்பமாக "கடவுளை" நிறுத்தி பின் மும்மூர்த்திகள், இந்திரன், அக்கினி, வருணன், வாயு, அஷ்டதிக்கு பாலகர்கள், முப்பத்து முக்கோடி தேவர்கள், புண்ணியலோகம், நரகலோகம், மேல் உலகம், மத்திய உலகம், பாதாள உலகம், வேதம், ஸ்மிருதி, அத்வைதம், துவைதம், வசிஷ்டாத்வைதம் என்ற புரட்டு வார்த்தைகளான கயிறுகளை "கடவுளாகிய" மத்திய கம்பத்தின் உச்சியிலிருந்து இழுத்துக்கட்டி அப்படி கட்டிய கயிறுகளின்மேல் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள், கின்னரர், கிம்புருடர், சித்திவித்தியாதரர், நாரதர், தும்புருவர், நாலுவேதம், ஆறு சாஸ்திரம், பதினெண் புராணம், அறுபத்திநாலு கலைக்கியானம் [illegible]

வம், மனு வியாக்கியானம், முற்பிறப்பு, பிற்பிறப்பு, இதிகாசங்கள், கடவுள் லீலா விநோதங்கள், கோவில் குளம், தீர்த்தம், தேர், திருவிழா, பூசை, சடங்கு, பழக்கம், வழக்கம் என்பதான இத்தியாதி படுதாக்களைப்போட்டு கூடாரக் கட்டுதலை பூர்த்தி செய்த பார்ப்பனீயப் பேய், மக்களுக்கெல்லாம் தன்னை மேலாக எண்ணிக்கொண்டு கடவுளாகிய மத்திய கம்பத்தின் உச்சியில் போய் உட்கார்ந்துகொண்டு (பிராம்மணோ மமதேவதா) நானே பூலோகக் கடவுள் (பூசுரன்) என்ற ஏமாற்றுமொழி பேசியபோது தங்கள் முன் புதிதாய் நிறுவப்பட்ட கூடாரத்தின் அமைப்புகளைப் பார்த்துப்போக உள்ளே வந்தடைந்த நம் திராவிட மக்களை வசியப்படுத்திக்கொண்டு முதலில் மக்களுள் நாலுசாதியாகப் பிரித்து காலம் செல்லச்செல்ல நாலாயிரம் சாதிகளாக்கி, ஒருவர்வழி மற்றவர் செல்ல இயலாமலும் ஒருவர்க்கொருவர் சாதி உயர்வு தாழ்வு கற்பித்து, நாம் ஒன்று சேர்ந்தால் தங்களின் ஏகபோக ஆதிக்கத்திற்கு அழிவு நேரிடும் என்பதை நன்குணர்ந்த ஆரியப் பார்ப்பனர்கள் நம்முள் பல பேத உணர்ச்சிகளைக் கற்பித்து கடந்த அனேக நூற்றாண்டுகளாக நாம் மீண்டும் தலைதூக்கவியலாது தவித்த நிலைமையிலிருந்ததை மீட்கவே "சுயமரியாதைச் சூரியன்" ஈரோட்டில் நமது மாபெருந்தலைவர் "பெரியார் ஈ. வெ. ரா." உருவத்தில் உதயமாயிற்று. பின்னர் கடந்த இருபது ஆண்டுகளாக பெரியாரின் சலியாத பிரசார உழைப்பு, பயன் கருதாத் தொண்டு, நம்போன்றாரின் ஒத்துழைப்பு ஆகியவற்றின் பயனாய் சூழ்ச்சிக்கூடாரத்தினுள் தன்னுணர்வின்றி தங்கியிருந்த நமதின மக்களுள் பெரும்பாலோர் வஞ்சகரின் சூதுணர்ந்து வெளியே வந்துவிட்டார்கள். பூமியில் மக்கள் உள்ளளவும் நிலையாகவிருக்கும் என்று ஆரியர்கள் நம்பியிருந்த இந்துமதக் கூடாரம் சுயமரியாதைச் சூரியனின் வெப்பம் தாங்காது கடவுளாகிய கூடார நடுக்கம்பம் மடித்தும், மடித்த கம்பத்தின் உச்சியில் ஆடம்பரமாக உட்கார்ந்திருந்த பார்ப்பனீயப்பேய் தன் நிலையிலிருந்து கால், கை சருக்கி விழுந்தருவாயிலும், கயிறுகள் நைந்தும், படுதாக்கள் மக்கிப்போயும் கூடாரம் அடியோடு பூமியில் விழத்தக்க நிலையிலிருக்கிறது- மடித்தல் காரணமாக கீழே விழும் கூடாரப் பொருள்கள் யாவும் சின்னாளில் இருந்த இடம் தெரியாமல் போகப்போகிறது. அக்கூடாரம் இடம் பெற்றிருந்த அதேயிடத்தில் நமது பகுத்தறிவின் பாரிய சக்தியால் "திராவிட தனி ஆட்சி" என்ற பூரண சந்திரன் உதயமாகும் காலம் அதிக தூரத்திலில்லை என்பது என்போன்றாரின் உறுதியான எண்ணம். உலகில் நிசமாகத் தூங்குபவர்களை எழுப்பிவிடலாம். ஆனால் தூங்காது கண்ணை மூடிக்கொண்டு படுத்திருப்பவர்களை எழுப்ப இயலாது என்பதுபோல் நாம் எவ்வளவு எடுத்து உரைத்தும், கேளாக்காதாக, விழப்போகும் கூடாரத்தின் நடுக்கம்ப அசைவைக்கண்டும், நமதின மக்களுள் இன்னும் சிலர் உள்ளே தங்கியிருக்கப் பிரியப்படுவார்களானால் அது அறிவுடைமையாகாது என்பதை அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொல்லத்தான் இம்மாநாடு கண்டு இங்கு நாம் கூடியிருக்கிறோம்.

## திராவிடர்கள் பார்ப்பனீயப் பிடிப்பிலிருந்து எவ்வாறு மீளுவது?

ஆரியப் பார்ப்பனர்கள் நம் திராவிட நாட்டில் குடி புகுந்த பின்னர் நமது மூவேந்தர்களையும் மயக்கி அந்நாள் திராவிடப் பெருங்குடி மக்களாகயிருந்த நம் தலைமேல் "இந்து மதம்" என்ற அர்த்தமற்ற ஓர் கற்பனைச்சொல்லை சுமத்தியிருக்கிறார்கள். உதாரணமாக இன்றைய உலகில் கிருஸ்து மதம், முகம்மதிய மதம், புத்த மதம், சீக்கிய மதம் என்பதாக பல மதங்களிருக்கப்பார்க்கிறோம். அவற்றுள் கிருஸ்துவைத் தலைவராகக்கொண்டெழுந்தது கிருஸ்துவ மதம், முகம்மது நபியைத் தலைவராகக் கொண்டாரம்பிக்கப்பட்டது முகம்மதிய மதம், புத்தரைத் தலைவராக உடையது புத்த மதம், குரு நானக்கைத் தலைவராகக் கொண்டது சீக்கிய மதம். இந்நிலையில் நம்மேல் சுமத்தப்பட்டிருக்கும் "இந்து" என்ற சொல்லுக்கு உரிய மதத் தலைவன் யாரும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் வார்த்தை ஆராய்ச்சியாளர்களின் கண்டு பிடித்தலில் "இந்து" என்ற சொல்லுக்கு பாரசீக பாஷையில் "திருடர்கள்" என்ற பொருள் இருப்பதாகக்கூறுகிறார்கள். மத ஆராய்ச்சியாளர்களைக் கேட்டால் இந்துமதமென்பது அநாதி காலத்தில் அநாதியாய்த் தோன்றியது என்ற பொருளுரைக்கிறார்கள். மதவியலார் தெரிவிக்கிறவாறு அநாதி என்ற சொல்லை மதப் பிரிவினை செய்து பார்த்தால் அச்சொல்லிற்கு உரிமையற்றது, யாருமற்றது என்ற அருத்தம் தானே தொனிக்கிறது. ஆகவே இந்த "இந்து மதம்" என்பது ஆரிய மதம், அவர்கள் பேசும் மொழி வடமொழி (சமஸ்கிருதம்) அவர்கள் கலை, நாகரீகம், யாவும் நம்மில் வேறுபட்டது என்பது தெள்ளெனத் தெரிகிறதல்லவா? ஆனால் நாம் திராவிடர்கள், திராவிட இனம், நமது பேசும் மொழி தமிழ், நமது கலை, நாகரீகம் யாவும் வேறு என்பதை சந்தேகமற உணரவேண்டும். நம்மை ஆரிய, பார்ப்பனீயப் பிடிப்பிலிருந்து விலக்கிக்கொள்ளவேண்டுமானால் நாம் இந்து மதம் என்ற உணர்ச்சி, எண்ணம், சொல்லுதல் ஆகியவற்றை நம்மிலிருந்து அடியோடு உதறித்தள்ளிவிட்டால் மற்றவை யாவும் தானே சரியாகிவிடும்.

(அடுத்த கிழமை தொடரும்)

## நீடாமங்கலம் திராவிட மாணவர் கழகம்

நீடாமங்கலம் திராவிட மாணவர் கழகத்தின் தொடக்கவிழா 1-12-45 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு திருவத்திபுரம் தோழர் டி. இ. ஞானசுந்தரம் பி. ஏ., தலைமையில் நடைபெற்றது. அது போழ்து "திராவிட மாணவர் கழக நோக்கம்" என்பதுபற்றி சிவகாசி தோழர் எம். ராமசாமி காருகுடி வி. கணபதி, நீடாமங்கலம் எஸ். சம்மு, ஆர். விசுவநாதன் ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். பின்னர் தலைவர் முடிவுரையுடன் தோழர் எஸ். சரவணன் பி. ஏ. நன்றி கூறினார். தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது. வினைக்குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

# சூளுரைப்பீர் சூரரே!

[வடஆற்காடு மாவட்ட திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) முதல் மாநாட்டில் தோழர் சி. வி. சுப்பராயன் அவர்களின் வரவேற்புரை]

★

பெரியார் அவர்களே, தலைவர் அவர்களே, ஏனைய மாநாட்டுப் பிரதிநிதிகளே, தோழர்களே, உங்கள் அனைவருக்கும் என் நன்றி கலந்த நெஞ்சார்ந்த வணக்கம்.

வடஆற்காடு மாவட்டத்தில் வதியும், இருபது லட்சம் திராவிடர் சார்பில் உங்களை வரவேற்கிறேன்.

நாம் போராட்டத்தில் ஈடுபட்ட போர்வீரர்கள்! மனிதன், சமூகம், நாடு, இவற்றின் முற்போக்கும் வளர்ச்சியும் ஒன்றையொன்று பற்றி நிற்கிறது. மக்கள் சுயமரியாதையும் அறிவும் பெற்றால் சமூகம் சுயமரியாதை பெற்றுத் தன் நிலையில் உயரும். சமூகம் உயர்ந்தால், நாடு சுதந்தரம் அடையவும், சுதந்தரத்தைக் காப்பாற்றவும் அருகதை உடையதாக மாறும். அதற்காகத்தான் நாம் போராட வேண்டியிருக்கிறது. ஓர் விதவை விபசாரியாகும்போது விதியின் விளையாட்டு என்று கூறும் வேதாந்திகளை விளித்து, அது விதியின் விளையாட்டல்ல, மதியிருட்டானதின் அடையாளம்; மதம் சாதி என்ற மடமைகளால், உள்ளம் உயிர் ஆகியவற்றின் சக்திகளை உணர மறந்ததின் விளைவு என்று இடித்துக் கூறுகிறோம். ஒடுக்கப்பட்ட தோழர்கள் உதாசீனப் படுத்தப்படும்போது சமூகத்தினர், அவர்களின் உழைப்பை மட்டும் உறிஞ்சிக்கொள்வதை எடுத்துக் காட்டி உழைப்பின் மதிப்புக்காக போராடுகிறோம். இப்படி சமூகத்தில் சந்தர்ப்பம் நேர்ந்தபோதெல்லாம் போராடும் போர்வீரர்களாகிய நாம் இப்படிப்பட்ட மாநாடுகளில் ஒருவரை ஒருவர் சந்திக்கிறோம். உள்ளங்கள் பேசுகின்றன. பொன்போன்ற மொழிகளால், புதுப்புது போர்முறைகளை தலைவர்கள் விவரிக்கிறார்கள். தியாக உணர்ச்சியை உருவாக்குகின்றனர் தொண்டர்கள்.

நாட்டின் அரசியல் நிலையைக் கவனியுங்கள். வார்தாவாசி, வேதா ராமராஜ்யக் கனவு காண்கிறார். மகமதியர் திலகம் முகமதலி ஜின்னா எங்களுக்கு ராமராஜ்யமும் வேண்டாம்; பிரிட்டிஷ் ராஜ்யமும் வேண்டாம்; பாகிஸ்தான் ராஜ்யம்தான் வேண்டும் என்று கேட்கிறார்.

நமது தந்தை பெரியார் தென்னாட்டைப் பொறுத்தவரை திராவிடஸ்தான்தான் தேவை என்கிறார். இதை வேவல் உணர மறுக்கலாம், குட்டிக்கதையும், குறும்புச் சித்திரமும் எழுதும் கோமாளிகள் உணர மறுக்கலாம். பொன் கட்டிகள் மீது புரண்டுகொண்டு, பொருளாதார பீடத்தில் அமர்ந்துள்ள பிர்லாக்கள் இனஎழுச்சியை பணப்பைகளால் ஒழித்துக் கட்டலாம் என்று இறுமாந்திருக்கலாம். ஆனால் திராவிடத்தில் இத்தீ மூளுகிறது. மக்கள் மனோபாவம் என்னும் விறகு, மடமை என்னும் நீரால் நனைந்திருக்கிறது. பகுத்தறிவுச் சூரியன் அந்த ஈரத்தை ஒழித்தவுடன், தீ வேகமாகப் பரவப் போகிறது. ஆகவே பகுத்தறிவுச் சூரியர்களாகிய வாலிப ஜீவரத்தினங்களே! அந்த வேலையைத் தீவிரப்படுத்துங்கள். சேலத்திலே சென்ற ஆண்டு ஆகஸ்டிலே நம் போர்முறை புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. திருச்சி அதை அங்கீகரித்திருக்கிறது. அதன் மூலம் நம் போராட்டம் விரிவடைந்துவிட்டது.

அகில இந்திய காங்கரஸ் கட்சிக்கு நம் திராவிடர் கழகம் இளைத்ததல்ல. அதற்கு ஆங்கில ஏகாதிபத்ய ஒழிப்பு மாத்திரம் கொள்கை என்று சொல்லப்படுகிறது. ஆனால் நம் கொள்கை, ஆங்கில ஏகாதிபத்யத்துடன் ஆரிய ஏகாதிபத்யம் பனியா ஏகாதிபத்யம் இரண்டையும் ஒழிப்பது. ஆங்கிலேயரிடமிருக்கும் அதிகாரத்தை ஆச்சாரிய பரம்பரையிடம் வாங்கித் தரப் பாடுபடுகிறது காங்கரஸ். ஆனால் நாம், அனைவருக்கும் அதிகார பீடம் பொது என்கி

அன்று ஹிட்லரைக் குறித்து, தளபதி அண்ணாதுரை கூறினார் "உச்சியில் ஏறியவனே நீ உருள்வது நிச்சயமென்று!". அதே மொழியினை நாம் காங்கரசுக்குக் கூறுகிறோம். போட்டி மனப்பான்மையால் அல்ல, பொறாமையாலும் அல்ல. இனத்திற்கொரு வட்டாரம் பிரித்துக்கொடுக்க இணங்காத காரணத்தால்!

திருச்சியில் உதித்த கறுப்பு சட்டைப்படை இயக்கத்திற்கு வாழ்த்துரையுங்கள், வலிமிக்க பட்டாளமாக அது ஆக, பாழடைந்த திராவிடத்தைப் புதுப்பிக்க!

கடைசியாக ஒரு வேண்டுகோள்,

நாம் இங்கு கூடியிருக்கிறோம். நம் நகைச்சுவையரசும், இசைமணியும், இரும்புக் கம்பிகளுக்குப் பின்னால் இருக்கிறார்கள். நமது வேலை. அவர்கள் குற்றவாளிகளா இல்லையா என்பதைப் பரிசோதிப்பதல்ல! அவர்களுக்குக் கருணைகாட்டி விடுவியுங்கள் என்று சர்க்காரைக் கேட்டுக் கொள்வதுதான். கலைச் செல்வங்கள் கிருஷ்ணனையும், பாகவதரையும் கருணைகாட்டி விடுவிக்கும்படி சர்க்காருக்கு விண்ணப்பித்துக்கொள்ளுங்கள். இல்லையேல் அவர்கள் கலைத்தொண்டினை நாம் மறந்தவர்களாவோம்.

பெரியோர்களே! இளந்தோழர்களே! இன எழுச்சிக்கு உயிர்நீத்த தியாகிகள் நடராசனையும், தாலமுத்துவையும் நெஞ்சில் நினைத்து திராவிடத்தின் விடுதலைக் குழைப்போம் என்று சூளுரைத்து மாநாட்டைத் துவக்குங்கள், சூரர்களே! வெற்றியுடன் நடத்திக்கொடுங்கள். மீண்டும் வணக்கம்.

திராவிடநாடு திராவிடருக்கே!

---

## தோழர்கட்கு!

இடமின்மையால் "தீபாவளி கொண்டாடாத தீரர்கள்" பட்டி இவ்வாரம் வெளிவரவில்லை.

கிருஷ்ணன்—பாகவதர் விடுதலை வேண்டுகோள் கூட்டங்களின் செய்திகள் வரவேண்டியதாகிவிட்டதால் வேறு பல செய்திகள் வரவில்லை.

செய்தியனுப்பும் தோழர்கள் மிக சுருக்கமாகவும், தெளிவாகவும் எழுதியனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

## பொன்மலையில் பங்கயற்செல்வி-செல்வ மாணிக்கம் வாழ்க்கை ஒப்பந்தம்

### பெரியார் தலைமை வகித்தார்

5-12-45ம் தேதி மாலை 6 மணிக்கு பொன்மலை தொழிலாளர் காலனியான D 32-7 நெம்பர் இடத்தில் போடப்பட்டிருந்த அலங்காரப்பந்தலில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பெரியார் வாகனேரி மருத்துவர் சங்கத்திலிருந்து சுமார் 3 மணிக்கு பொன்மலைக்கு வந்தார். பொன்மலை திராவிட வாலிபர் சங்க ஆதரவில் தோழர் கிருஷ்ணன் இல்லத்தில் ஒரு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. பெரியார் தலைமை வகித்தார். தோழர் பெருமாள் அவர்கள் திராவிட இயக்கத் தோழர்கட்கு பொன்மலையிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சியார் செய்யும் தொந்திரவுகளைப்பற்றியும், திராவிடர் கழகத்தாரைப்பற்றி அவர்கள் செய்துவரும் இழிவான பிரசாரத்தைப்பற்றியும். எடுத்துக் கூறி திராவிட இயக்க வாலிபர்கட்கு சில யோசனைகள் கூறவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

பெரியார் அவர்கள் எழுந்து பேசும் போது திராவிட வாலிபர்கள் எதற்கும் தளர்ச்சியடையக்கூடாதென்றும், ஒற்றுமையாகவும் கட்டுப்பாடாகவும் இருந்து வேலை செய்ய வேண்டுமென்றும், நாம் சமுதாயத்தில் கேவலமாகவும், இழிவாகவும் மதிக்கப்பட்டு வருகிறோம் என்றும், அதை ஒழிக்க எந்தவித இன்னல்கள் வந்தாலும் அதை ஒழிக்கப்பாடுபட வேண்டும் என்றும் கூறி, நமது எதிரிகளின் கட்டுப்பாட்டையும் ஒற்றுமையையும் விளக்கிக்கூறி அவர்களைப் பார்த்து கற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறினார். பல தோழர்கள் இடை இடையே சில சந்தேகங்களைக் கேட்டார்கள். அதற்கும் தக்கபடி பதில் கூறினார். பின் அங்கேயே மேற்படி தோழர்களால் பெரியாருக்கு தேனீர் விருந்தளிக்கப்பட்டது.

### மணமகள் பாடினார்

பின் மாலை 6 மணிக்கு பங்கயற் செல்வி—செல்வமாணிக்கம் வாழ்க்கை ஒப்பந்த விழா ஆரம்பிக்கப்பட்டது. ஏராளமான ஆண்களும் பெண்களும் கூடியிருந்தார்கள். சில தோழர்களும், மணமகள் பங்கயற் செல்வியும் இயக்கப் பாடல்கள் பாடினார்கள். மணமகளின் தந்தையார் தோழர் பழனியப்பா பெரியார் அவர்களைத் தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொண்டார். தோழர் பராங்குசம் ஆதரித்தார். பெரியார் தலைமை வகித்து முகவுரையாகப் பேசியபின் மண மக்கள் தங்கள் ஒப்பந்தங்களைச் செய்து மாலை மாற்றிக் கொண்டார்கள். பின் தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், டி. கே. சீனிவாசன் ஆகியோர் திருமணத்தைப்பாராட்டிப் பேசினார்கள். பின் பெரியார் முடிவுரையாகப் பேசும் போது திருமணம் என்றால் என்ன ' என்பதுபற்றியும், திருமணங்களில் மாறுதல் வேண்டியதன் அவசியம் பற்றியும் திருமணங்களில் பெண்களை அடிமை செய்து வைக்கப்பட்டிருப்பது பற்றியும், சுயமரியாதைத் திருமணங்களாலும், பதிவு மணங்களாலும் பெண்களுக்கு ஏற்படும் நன்மைகளைப்பற்றியும் மிக விளக்கமாகவும் விரிவாகவும் பேசினார். மண மகள் தந்தையார் நன்றி கூறலுடன் மணவிழா இனிது முடிந்தது.

பெரியார் அவர்கட்கு பொன்மலை—கற்கண்டார் கோட்டை திராவிட கழகத்தினர் கறுப்புத்துணிகளை மாலைகளாக அணிவித்தது குறிப்பிடத்தக்கது.

(திருமணத்தின் நினைவாக குடி அரசுக்கு 2-ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது)

## மீனாட்சிசுந்தரம்பிள்ளை நிதி

நாட்டிய கலாநிதி தோழர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கட்கு ஒரு நிதி திரட்ட பல தோழர்கள் முன் வந்து ஒரு கமிட்டியும் நிறுவியுள்ளனர்.


GURU

போரில் வெற்றி!
எனவே
சமாதான கால தேவைகளிலும்
வெற்றி வேண்டும்.
ஆகையால்

# குரு மருந்துகள்

இனி உங்கள் தேவைக்குக் கிடைக்கலாம்.

முக்கிய தயாரிப்புகள்.

| | ரூ. அ. பை. |
|---|---|
| குரு தைலம் (210 வியாதிகளுக்கு) | 1—8—0 |
| குரு பல்பொடி (தந்தரோகங்களுக்கும்) | 0—5—0 |
| குரு களிம்பு (பத்து, படைகளுக்கு) | 0—14—0 |
| குரு ஆயுள்வேத லேகியம் | 2—0—0 |
| குரு ஆஸ்த்மா டிராப்ஸ் (இருமல் காசங்களுக்கு) | 2—0—0 |
| குரு தாதுவிருத்தி மருந்து (வாலிப-வயோதிகர் களுக்கும்) | 5—0—0 |
| குரு சந்தான சோர்ணம் (ஸ்திரிகள் சகல கர்ப்ப நோய்களுக்கும்) | 5—0—0 |
| குரு குழந்தை செட் (CHILDREN SET) (குழந்தைநோய்-பாதுகாப்புக்கும்) | 8—10—0 |

குரு மருந்துகள் குடும்ப பொக்கிஷம்

உங்கள் ஊர் மருந்து—ஷாப்கடைகளில் கேளுங்கள். இல்லாவிடில்

டாக்டர்
எ. மதுரம் சன்ஸ்,
குரு மருந்து சாலை..........
திருச்சினாப்பள்ளி (S. I.)



# ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் : : கலர் புடவைகள்
உயர்தர ரகங்கள்! உத்திரவாத ஜரிகை!!
80, 100 நெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!
ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

ராஜம் விலாஸ்,
சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் P. O. திருச்சி.

# ஏகாதசி !

பட்டினி விரதமிருப்பவருக்கு ஏகாதசி யன்று மோட்சலோகத்திலே ஒரு சீட் ரிசர்வ் செய்யப்படுகிறதாம். பட்டினி மட்டுமல்ல இரவு முழுதும் கண் விழிக்க வேண்டும், இது ஏகாதசிக்கு வகுத்துள்ள சட்டம். இந்தப் பண்டிகைக்குப் பலபல கதைகள் கூறுவார்கள். எல்லோரும் ஏகாதசி விரதமிருந்து நாகலோகம் "வேகன்சியாகி" விட்டபடியால் ருக்மாங்கதராஜனை நரகத்திற்கனுப்ப மோகினி வருகிறாளாம். பிள்ளையைக்கொன்றா லும் கொல்லுவேன் ஏகாதசியை நிறுத்த மாட்டேன் என்று ருக்மாங்கதன், மகன் தலையை வெட்டி எறிய முற்படுகிறான். கொலை செய்தவருக்கு நாகலோகம் கிட்டாதா என்று கேட்காதீர்கள். பக்தியின் காரணமாக எதுவும் செய்யலாம். சிங்காரிக ளோடு அமர்ந்து சீட்டாடலாம், மதுக் கோப்பையோடு கொஞ்சலாம், இரவை இன்ப இரவாக மாற்றிக்கொள்ளலாம், காட்டுமிராண்டி சேஷ்டைகளும் மிருக விளையாட்டுகளும் நடத்தலாம், கண் விழித்தால் மட்டும் போதும். இப்பொழுது நடக்கும் ஏகாதசிப்பண்டிகை நாட்டிலே வேறு எந்த முறையில்தான் நடக்கிறதென்று கேட்கிறோம். மக்கள் நரகத்திற்குச் செல்லவில்லையே என்று தேவாதிதேவர்களுக்கு கவலையெண்ணம் ஏற்பட்டு ருக்மாங்கதனிடம் மோகினியை அனுப்பிவைக்கும்போது சாதாரண மக்கள் எவ்வளவு அயோக்கியத்தனம் செய்தாலும் அதுவும் ஏகாதசி போன்ற பண்டிகைகளில் செய்வதால் குற்றமே யில்லையென்றுதான் பக்தர்கள் கருதிப் பரவசமடைகிறார்கள்.

ஆனால் ஒன்று! வயிற்றுக்குச் சோறில்லாது இயற்கையாகவே ஏகாதசி விரதம் அனுஷ்டிக்கும் ஏழை மக்களுக்கு மோட்சம் (சாவு) கிடைத்துவருவதுமட்டும் அந்த பக்தர்கள் உட்பட, நாடறிந்த உண்மை! (மு. க.)

## கள்ளிகுளம் திராவிடர் கழகம்

1-12-45ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு நன்கொடை வரவு ரூ. 319—9—0, செலவு ரூ. 194—6—9 என்றும் பாக்கி இருப்பு ரூ. 125—2—3 என்றும் செயலாளர் தோழர் பி. எம். ஜேஸிங் அறிவிக்கிறார்.

## கள்ளக்குறிச்சி திராவிட மாணவர் கழகம்

மேற்கண்ட கழக திறப்புவிழா கூட்டம் தோழர் திரமணி தலைமையில் நடைபெற்று தோழர் இரண்யன் தலைவராகவும் தமிழ் ஒளி செயலாளராகவும் குப்புசாமி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# கருணை காட்டுக !

★திருப்பத்தூர் (வ. ஆ.) முனிசிபாலிடியில் 29-11-45ல் நடைபெற்ற முனிசிபல் கூட்டத்தில் தமிழ் மணிகள் என். எஸ். கிருஷ்ணன், எம். கே. தியாகராச பாகவதர் இருவரையும் கருணைகாட்டி விடுதலை செய்யுமாறு அரசாங்கத்தாரை கேட்டுக்கொள்வதாக கௌன்சிலர் தோழர் சி. கே. எஸ். மணி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஏக மனதாக நிறைவேறியது.

★போளூரில் 12-12-45ல் பஞ்சாயத்துபோர்டில் "கிருஷ்ணன்-பாகவதருக்குக் கருணை காட்டுக" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சென்னை கவர்னருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

★திருவிதாங்கூரில்,

23-11-45ல் நாகர்கோயில் கூட்டம்.
25-11-45ல் திருவனந்தபுரம்கூட்டம்.
27-11-45ல் கன்னியாகுமரி கூட்டம்.
28-11-45 கொட்டாரத்தில் கூட்டம்.
31-11-45 மருங்கூரில் கூட்டம்.
2-12-45 ஆரல்வாய்மொழியில் கூட்டம்.
6-12-45 திட்டுவிளையில் கூட்டம்.
9-12-45 திருவனந்தபுரம் கூட்டம்.

★விழுப்புரத்தில் திராவிட மாணவர் கழக கூட்டத்தில் நகராட்சித் தலைவர் தோழர் என். கோவிந்தராசலு அவர்கள் "கருணை காட்டுக" என்ற தீர்மானத்தை பிரேரேபித்து நிறைவேற்றப்பட்டது.

★தஞ்சையில் 15-சங்கங்களின் சார்பாக 4-12-45ல் நகரசபைத் தலைவர் தோழர் ராவ்பகதூர் எ. ஒய். அருளானந்தசாமி நாடார் அவர்கள் தலைமையில் 20,000 மக்கள் கூடிய மாபெருங் கூட்டத்தில் "கருணை காட்டுக" என்ற தீர்மானம் நிறைவேறியது.

## தஞ்சை மாவட்ட திராவிட இளைஞர்களுக்கு

கறுப்புசட்டைத் தொண்டர் படையில் சேர விரும்பும் ஆங்காங்குள்ள திராவிட இளைஞர்கள் தங்கள் ஊரிலேயே ஒன்றுகூடி தங்களுக்குள் ஒரு தலைவரைத் (கேப்டனைத்) தேர்ந்தெடுத்துக்கொண்டு தலைவருடைய முழு முகவரியையும், சேர்ந்தவர்களுடைய பெயரையும் கீழுள்ள முகவரிக்கு உடனே தெரிவித்தால் பாரம் அனுப்பி வைக்கப்படும்.

ஆங்காங்கு சேரும் தோழர்கள் கவாத்து முதலிய பயிற்சிகளை உடனே பழகிக்கொள்ள வேண்டுகிறோம்.

முகவரி: வி.எஸ்.பி. யாகூப், காரியதரிசி,
திராவிடர் கழகம், விஜயபுரம் P.O.
திருவாரூர்.

---

சேலம் அன்னதானப்பட்டி மிட்டாய் தொழிலாளர் சங்கக் கூட்டம் 28-11-45 ந்தேதி தோழர் சிரங்கப் பத்தர் தலைமையில் நடைபெற்றது.

கடல்கடந்த நாடுகளில் குடியேறும்வேலை-வெற்றிக்காக-
போரிடுவதைவிட மிகக் கடினமாக இருக்கும்

**மே. த. கவர்னரின்**

சௌகரியங்கள்—கஷ்ட நிவாரண சகாய நிதிக்கு
மென்மேலும் நன்கொடை கொடுத்துதவுமாறு உருக்கமாக
வேண்டுகோள் விடுகிறது.

ஏனென்றால்

இந்திய, பிரிட்டிஷ் துருப்புகளுக்கு சௌகரியங்கள்
மிகமிக அவசியமாக தேவைப்படுகின்றன.

★

எனவே

ஹானரரி டிரஷரர், மே. த. கவர்னரின் சௌகரியங்கள்,
கஷ்ட நிவாரண சகாயநிதி, C/o இம்பீரியல் பாங்க், இந்தியா
முதல் லைன் பீச், சென்னை, என்ற விலாசத்துக்கு
தயவு செய்து பணம் அனுப்பி கொடுக்கவும்.

குடி அரசு

1945-ஆம் டிசம்பர் ௴ 15-௳

# வேவல் பேச்சும் காங்கரஸ் வீச்சும்

வேவல் பிரபு பேசிவிட்டார். என்ன பேசினார்? "இந்தியாவை எத்தனை நாடுகளாக வேண்டுமானாலும் பிரித்து சர்க்கார்களை ஏற்படுத்திக்கொள்ளுங்கள் எங்களுக்கு ஆக்ஷேபணை இல்லை" என்று சொல்லிவிட்டார்.

காங்கரஸ்காரர்களுக்கும் ஒரு நல்ல பேதி மருந்து கொடுத்துவிட்டார். அதாவது, "பலாத்காரம் குழப்பம் ஆகிய காரியங்களை அரைவினாடியும் அனுமதிக்கமாட்டேன், அடக்கி ஒடுக்கி அதோகதி ஆக்கிவிடுவேன்" என்பது ஆக காட்டி இருக்கிறார். வேவல் பிரபுவும், காந்தியாரும், பண்டிதரும் நேரில் கண்ட சமயத்திலும் இதை சொல்லி இருப்பார் போல் தோன்றுகிறது. ஆதலால்தான் காந்தியார் திரும்பவும் அஹிம்சை தத்துவம்பற்றிப் பேசி இருக்கிறார் என்பதோடு, நேரு பண்டிதரும் குயிட் இன்டியாவை மெள்ள கைவிடுகிற மாதிரியில் "குயிட் இந்தியா" அற்ப விஷயம் இனி அதை முக்கியமாய்க்கருதாதீர்கள் இந்தியா புனருத்தாரணத்தை முக்கியமாய்க்கருதுங்கள் என்றுசொல்லமுனைந்துவிட்டார்.

வேவல் பிரபுவானவர் இந்த மிரட்டுதலை சிம்லா மாநாட்டில் காட்டி இருப்பாரானால் மதுரைக் குழப்பம் போன்ற காலித்தனங்கள் நடந்தே இருக்காது. நாம் "வேவலைத் திருப்பி அழைக்க வேண்டும், அவருக்கு நிர்வாகத் திறமை போதாது, அவரை இந்திய வைசிராயாக அனுப்பியது பார்லிமெண்டாரின் புத்திக்குறைவு" என்று எழுதிய பிறகே, காந்தி நேருவை மிரட்டவும், ஆங்காங்கு 144 போடவும் தடபுடலாக பந்தோபஸ்த்து நடவடிக்கை எடுக்கவும் முனைந்தார், என்றாலும் இப்போதாவது புத்திவந்து மிரட்டி இருப்பது பாராட்டத்தக்கதாகும்.

காங்கரஸ்காரர் செய்யும் நாசவேலை, குழப்பம், காலித்தனம் ஆகிய காரியங்கள் சமாதானமாய் இருந்துவரும் பிரஜைகளை தொல்லை கொடுப்பதாகவும், ஆளும் ஜாதியாருக்கு எவ்வித தொல்லையோ கெடுதியோ இல்லாமல் சமாதானமாய் வாழும் மக்களையே சர்க்காரும் தொல்லை கொடுப்பதாகவும் ஏற்படும்படியாய் இருக்குமானால் அது எப்படி யோக்கியப் பொறுப்பான காரியமாகும் என்று கேட்கிறோம்.

இந்த மிரட்டுதலை வேவல்துரை தேர்தலில் காங்கரசுக்கு நல்ல வெற்றி ஏற்பட்டதைக் கண்ட பிறகே, இனி காலித்தனம் இல்லாமலே காங்கரசுக்கு வெற்றி ஏற்பட்டுவிடும் என்று கருதி மற்ற மக்களைத் திருப்திசெய்ய இப்படிச் சொன்னாரோ என்பது நமக்குச் சந்தேகம்தான். எப்படி இருந்தாலும் இதிலிருந்தாவது இனி கொஞ்ச காலத்திற்காவது குழப்பம் தொல்லை நாசவேலை நடக்காதென்று கருதலாம். பண்டிதருக்கு "குயிட் இன்டியா" கூப்பாடு இப்போது வேண்டியதில்லை "அது அற்ப விஷயம்" என்று திடீரென்று ஞானோதயம் ஏற்பட்டது நமக்கு அதிசயமாக இருக்கிறது. "வெள்ளையர் வெளியேறிவிட்டால். இந்தியப் புனருத்தாரணம்மாத்திரமல்ல, மற்றும் அனேக காரியங்கள் சுலபமாய் செய்துகொள்ளலாம். ஆதலால் "குயிட் இன்டியா" மாத்திரமல்ல, 'குயிட் ஏஷியா' அவசியம்" என்று முழக்கின நேருவுக்கு இன்று வெள்ளையர் வெளியேறுவது அற்ப விஷயமாகவும் அவர்கள் இந்த நாட்டில் இருக்கும்போதே தேசியப் புனருத்தாரணம் அவசியமாகவும் ஏன் தோன்றிவிட்டது என்பது நமக்குப் புரியவில்லை. ஒரு சமயம் இனி இந்தக் கூப்பாடு இல்லாமலேயே தேர்தலில் வெற்றிபெற்றுவிடலாம் என்று கருதினாரோ அல்லது இந்திய தேசியப் புனருத்தாரண வேலைக்கு இவர்களை வெள்ளையர்கள் சேர்க்க மாட்டார்கள் என்று கருதி எப்படியாவது உள்ளே புகுந்துகொள்ளலாம், என்று கருதினாரோ தெரியவில்லை.

அராஜகம் ஏற்பட்டாலும் பாதகமில்லை" என்று சொன்ன காந்தியார் இப்போது அஹிம்சையைப்பற்றி இவ்வளவு பேசவந்ததும் கூட மற்ற கட்சியாரும் தண்டவாளம் பெயர்க்கவும், தந்திக் கம்பியை அறுத்து அதிகாரிகளைக் கொல்லவும் துணிந்து வருவதைக் கொண்டு இப்போது இறங்கிவந்துவிட்டாரோ என்றும் கருதவேண்டியிருக்கிறது. எப்படியானாலும் அவர்கள் அடைந்த மாற்றம் நல்லதுதான் என்று சொல்லுவோம்.

இனி டெல்லி சலோ, ஜேய் ஹிந்த், என்கின்ற கூப்பாடுகளும் அர்த்த மற்றவை என்பதையும் இவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்றே கருதுகிறோம். ஏனெனில் தேர்தலுக்கு கூப்பாடுகளை விட்டு விட்டு தேர்தலுக்குப் பின் செய்யப்போகும் வேலைகளைப் பற்றி திட்டங்கள் வெளியிட வேண்டிய அவசியத்திற்கு நேரு வந்து விட்டார். அதில் புதிய சங்கதி ஒன்றும் இல்லை. காங்கரஸ் தேர்தல் திட்டமானது பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் 1934ல் ஜஸ்டிஸ் கட்சிக்கும், காந்தியாருக்கும் (ஆச்சாரியார் மூலமாய்) கொடுத்த திட்டம் எதுவோ அதுவே இன்று நேரு அவர்களால்—ஏன்? காரியக்கமிட்டியால் வெளியிடப்பட்டு இருக்கிறது. ஆனால் காங்கரசுக்காரர்கள் இதுவரை எந்தத் திட்டத்தை தேர்தலுக்கு முன் சொன்னபடி தேர்தலுக்குப்பின் நடந்து காட்டினார்கள் என்று சொல்ல இடமிருப்பதாக அவர்கள் எடுத்துக்காட்ட முடியும்? ஆகவே இதுவும் ஜேய் ஹிந்த், டெல்லி சலோ, குயிட் இன்டியா, குயிட் ஏஷியா போன்ற வெங்காய வெடியே ஒழிய இதில் சரக்கு ஒன்றுமில்லை என்று உறுதியாய்க் கூறுவோம்.

வரி எடுப்பதாகச் சொல்லித் தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் புதிதாக 11வரிகள் போட்டார்கள். 1935-ஆம் சீர்திருத்த சட்டத்தை அழிக்கப்போவதாகச் சொல்லி ஓட்டுப் பெற்றவர்கள், அதைக் காப்பாற்றி நடத்திக்கொடுத்தார்கள். இன்றும் அதைக்காப்பாற்றி நடத்திக்கொடுக்கவே ஓட்டுப் பிச்சைக்குப் பல வேஷங்கள் போடுகிறார்கள்.

# ஆனால்!

## பார்ப்பனர் பினத்தலும் அதற்கு பதிலும்

"ஜஸ்டிஸ் கட்சியின் வேலை என்ன? ராமசாமி முதலியார், ராஜா சர்., ராஜன், ஷண்முகம் காலம் உத்தியோக வேட்டைக்காலம், ஆதலால் அக்கால ஜஸ்டிஸ் கட்சி புதைக்கப்பட்டது"

ஆனால் பார்ப்பான் உத்தியோகம் தேட, வெளிமாகாணம் போக இந்தி படிக்கிறான். ஜஸ்டிஸ்கட்சி உத்தியோகத்தில் வெற்றி பெற்றதா? இல்லையா?

o o

"ராமசாமி நாயக்கர்" காலத்தில் ஜஸ்டிஸ்கட்சி தேர்தலுக்கு நிற்காமலே விரட்டி அடிக்கப்பட்டு, ஜஸ்டிஸ் கட்சி இன்னும் ஆழமாகப் புதைக்கப்பட்டு விட்டது. நின்றவர்கள் 4ல் ஒரு பங்கு ஓட்டுக் கூடப் பெறவில்லை."

ஆனால் ராஜகோபாலச்சாரி காங்காஸ் மெம்பர் ஆவதற்கு "ஆல் இந்தியா காங்கரஸ்" ஆசாத் சாயபு தயவு வேண்டியிருந்தது. ராஜகோபாலச்சாரி கமிட்டி மெம்பர் ஆவதற்கு டாக்டர் ராஜன் காரியக் கமிட்டிக்கு காவடி தூக்கவேண்டியதாயிற்று.

o o

"நாயக்கர் எலக்ஷனில் வெற்றி பெற்றாரா? இல்லையா?"

"பார்ப்பனருடன் போட்டி போட நாயக்கரால் முடியாது, பார்ப்பனரை அசைக்கவும் முடியாது"

ஆனால் இன்று பார்ப்பனருக்கு ஆபத்பாந்தவனாக உள்ள சி. பி. ராமசாமியை விட்டால் கதி இல்லை. எங்குபார்த்தாலும் பார்ப்பன பாதுகாப்பு சங்கங்கள் துவக்கப்படுகின்றன.

o o

"ஜஸ்டிஸ் கட்சியை விட்டு ஈ. வெ. ராமசாமி "நாயக்கர்' விரட்டி அடிக்கப்பட்டு விட்டார்"

ஆனால் அவரை விரட்டி அடித்து விட்டதாக சொல்லிக்கொண்டவர்கள் "ஜஸ்டிஸ் கட்சியை மக்கள் விரும்பவில்லை, பார்ப்பனரல்லாதவர்களுக்கு புத்தி இல்லை, நன்றி இல்லை ஆதலால் ஜஸ்டிஸ் கட்சியைக் கலைத்து விடு என்று சொல்லித் தங்கள் "ஜஸ்டிஸ்" கட்சியைத் தான் கலைத்துக்கொண்டார்கள்.

o o

"காங்கரசுக்கு அமோக வெற்றி"

ஆனால் பிராமணர்களை காங்கரசுக்கு நிறுத்த அசப் அலிகள் அழைக்கப்படுகிறார்கள்.

o o

"ஜஸ்டிஸ் கட்சி பிராமண துவேஷக்கட்சி. அது புதைக்கப்பட்டு விட்டது. புதைத்த இடத்தில் புழுப்புறப்பட்டு விட்டது"

ஆனால் பிராமண பாதுகாப்பு சபை புதை குழியில் இருந்து தலை தூக்குகிறது.

"ஜஸ்டிஸ் கட்சியில் ஒற்றுமை இல்லை"

ஆனால்காங்கரஸ்காரர்கள்தான் காமராஜ், முத்துரங்கம், பக்தவத்சலம் கோஷ்டி, ராஜாஜி, டாக்டர் ராஜன், அண்ணாமலை, சுப்பையா கோஷ்டி என்பதாகப் பிரிந்து ஒருவரை ஒருவர் குறை கூறிக் கொண்டு அவரை நிறுத்தக் கூடாது இவரை நிறுத்தக்கூடாது என்று பேசிக்கொள்ளப்படுகிறது. கோஷ்டி கோஷ்டியாக பம்பாய் கல்கத்தா சென்று காரியக்கமிட்டிக்கு காவடி தூக்கப்படுகிறது.

o o

"ஜஸ்டிஸ் கட்சிக்கு அரசியல் கொள்கை இல்லை"

ஆனால் இன்று செல்லுகிற இடத்திற்கெல்லாம் சி. ஐ. டி. வருவது ஜஸ்டிஸ் கட்சிக்குத்தான் இருந்து வருகிறது.

o o

"ஜஸ்டிஸ் கட்சிக்கு நாட்டுப் பற்று இல்லை"

ஆனால் இந்த நாட்டில் ஜஸ்டிஸ் கட்சி ஒன்றுதான் 'திராவிடநாடு திராவிடருக்கே' என்று சொல்லுகிறது.

o o

"ஜஸ்டிஸ் கட்சியிடம் பொருளாதாரத் திட்டம் இல்லை"

ஆனால் இந்தியா முழுவதிலுமே சென்னைமாகாணத்திற்கு வெளி

---

கள் பேச்சுக்கு உள்ள நாணய மதிப்பு மக்கள் அறிந்ததே யாகும்.

ஆனால் ஓட்டர்கள் பாமரர்களாகவும், கை தூக்கும் யந்திரங்களாகவும், கூலிகளாகவும் உள்ளவரை காந்தி நேரு கப்சாக்கள் நடந்துதான் தீரும்.

எப்படியோ நமக்கு இன்று தேர்தல் கவலையோ தேர்தல் தொல்லையோ இல்லாததால் தேர்தலில் "வெற்றி" பெற்று ஆட்சி புரியப்போவதை கறுப்பு சட்டை தாங்கி காட்சிகாணக்காத்திருக்கிறோம்.

---

# கறுப்பு சட்டைப் படை அமைப்பு

திருச்சியில் 17வது மாகாண திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) மாநாடு திர்மானித்தபடி இயக்கத் தொண்டுக்கு கறுப்பு சட்டைப் படை திரட்டும் வேலை துவக்கப்பட்டிருக்கிறது.

ஏறக்குறைய முழு நேரத்தொண்டர்களே பெரிதும் சேர்க்கப் படுவார்கள். பெண்களும் சேரலாம். ஆதலால் அதில் சேர சம்மதமுள்ள படைவீரர்கள் தங்கள்

| | |
|---|---|
| ஊர் | படிப்பு அளவு |
| பெயர் | வயது |
| தந்தை பெயர் | தமது தகுதித்தன்மை |

ஆகியவைகளை அடியில்கண்ட விலாசத்துக்கு முதலில் தெரிவிக்க வேண்டுமாய் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

E. V. K. சம்பத், S. கருணானந்தம்,
க. ச. படை தற்காலிக அமைப்பாளர்கள்,
42, கச்சேரி வீதி, ஈரோடு.

கும் சுங்கவரி போடவேண்டுமென்று ஜஸ்டிஸ் கட்சிதான் போராடுகிறது.

o o

"ஜஸ்டிஸ் கட்சி அன்னிய ஆட்சியைப்பற்றிக் கவலைப்படுவதில்லை"

ஆனால் ஜஸ்டிஸ் கட்சி ஒன்றுதான் திராவிடநாட்டில் காந்தி ஆட்சி, நேரு ஆட்சிகூட கூடாது என்றும், இவர்கள் திராவிடநாட்டுக்குள்வரவேண்டுமானால், வால்டேரிலும், ரெய்ச்சூரிலும் 'பாஸ்ப்போர்ட்டு' வாங்கிக்கொண்டு வரவேண்டுமென்று கூறுகிறது.

o o

"ஜஸ்டிஸ் கட்சிக்கு அன்னியன் சுரண்டுதல் பற்றிக் கவலை இல்லை"

ஆனால் ஜஸ்டிஸ் கட்சிதான் மார்வாடி, குஜராத்தி, முல்தானி, பனியா, பார்சி, சிந்தி கூட திராவிட நாட்டிற்குள் தலைகாட்டக்கூடாது என்றும், தொழில் செய்யக்கூடாது என்றும், சொல்லுகிறது

o o

"காந்தி நேரு குடும்பத்தின் கொள்கை என்ன?"

"குயிட் இன்டியா வெள்ளையனே வெளியே போ."

"ஆனால் காந்தி நேரு குடும்பத்தின் வேலைத்திட்டமென்ன?"

கவர்னர்களையும், கவர்னர் ஜெனரலையும் அடிக்கடி பேட்டிகாண அனுமதி கேட்பதும், காணுவதும், அந்த சங்கதியை வெளியில் சொல்லக்கூடாது என்பதும்தான்.

o o

"இந்தியாவில் கட்சிபேதம், வகுப்பு பேதம் கிடையாது. இருப்பதாகக் காணப்படுபவை எல்லாம் வெள்ளையர் சிருஷ்டி"

ஆனால் கம்யூனிஸ்டு, இந்து மகாசபை, மிதவாதக்கட்சி, சீக்கிய ஸ்தாபனம், தேசிய முஸ்லீம், தேசிய நாடார், சமதர்மம் இவையெல்லாம் யாருடைய சிருஷ்டியோ? தெரியாது.

## பகுத்தறிவுக் கண்காட்சி

10-12-45 முதல் சீரங்கத்தில் நடைபெறும் எக்ஸிபிஷனில், சீரங்கம் திராவிடர் கழகத்தாரால் பகுத்தறிவுக் கண்காட்சி 24-12-45 வரை நடைபெறும். சுயமரியாதைப் புஸ்தகங்கள், படங்கள் கிடைக்கும்.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

## பெரியார் ஈ. வெ. ரா.

பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் 9ந் தேதியிலிருந்து 13ம் தேதி வரை வட ஆற்காடு ஜில்லாவில் அதாவது திருவத்திபுரம், அசனம்மாப்பேட்டை, வாழ்குடை, வந்தவாசி, வாணியம்பாடி முதலிய இடங்களில் சொற்பொழிவாற்றி விட்டு 14ம் தேதி 1 மணிக்கு வாணியம்பாடியிலிருந்து புறப்பட்டு சென்னை செல்லுகிறார். சென்னையில் 17ம் தேதி வரை தங்குவாரெனத் தெரிகிறது.

## பண்டிதர் பிரிவு

வருந்தத்தக்க செய்தி கேட்டு திடுக்கிட்டோம். பண்டித எஸ். முத்துசாமிப் பிள்ளை அவர்கள் 9-12-45 ஞாயிறன்று இயற்கை எய்தினார். பண்டிதர் பல நாள் விடுதலை பத்திரிகையின் ஆசிரியராயிருந்தார். அச்சமற்ற கிண்டலும், ஆணித்தரமான விளக்கமும் அவரது எழுத்திலே பொதிந்து கிடப்பதைக் காணலாம். சிறை வாழ்க்கை அனுபவமும் அவருக்கு உண்டு. ஊக்கத்தில் உள்ளமும், உழைப்பில் நுழைப்பும் கொண்ட தமிழ்க்கிழாரைப் பிரிந்து வாடும் தோழர்களின் துக்கத்தில் நாமும் பங்கு கொள்ளுகிறோம்.

## கோவை மாவட்ட திராவிடர் கழக (ஜஸ்டிஸ்) 6-வது மாநாடு

23-12-45 ஞாயிறன்று பொள்ளாச்சி நாராயணா டாக்கீஸ் தியேட்டரில் நடைபெறும்.

அவ்வமயம்

தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களும், தளபதிகளும், தோழர்களும் கலந்துகொள்வார்கள்.

## அடுத்தவாரம்

திருவத்திபுரம் மாநாட்டு நிகழ்ச்சிகளும், பெரியார் அவர்களின் கொடியேற்றுவிழா சொற்பொழிவும், பெரியார் அசனம்மாப்பேட்டை, வாழ்குடை, வந்தவாசி, வாணியம்பாடி ஆகிய இடங்களுக்குச் சென்ற நிகழ்ச்சிகளும் அடுத்த வாரம் வரும். ஆ—ர்.

## நடக்க இருப்பவை!

● திருப்பத்தூர் திராவிட மாணவர் கழக ஆண்டுவிழா 30-12-45ல் தளபதி சி. என். அண்ணாதுரை தலைமையில் நடைபெறும்.

● தஞ்சை மாவட்ட இசைவேளாளர் இளைஞர் கழக நிர்வாகக் குழு 6-1-46 திருவாரூர் அருணகிரி நிலையத்தில் நடைபெறும்.

● 16-12-45 ஞாயிறு மாலை 4-30 மணிக்கு சென்னை கூளை காண்ரன்ஸ்மித் நகர் மைதானத்தில், தோழர் சி. தங்கராஜ் அவர்கள் தலைமையில் ஒரு மாபெருங்கூட்டம் நடைபெறும்.

பெரியார் ஈ. வெ. ரா., தளபதி அண்ணாதுரை, தோழர்கள் வி. சின்னத்தம்பி, அழகிரிசாமி, நெடுஞ்செழியன் மற்றும் பலர் "இன்றைய அரசியல் நிலை" என்பதுபற்றி பேசுவார்கள். ஒலி பெருக்கியும் உண்டு.

## தோழர் சாமிநாதன் தண்டனை குறைக்கப்பட்டது

### வழக்கறிஞர்கள் வேதாசலம், வேணுகோபால் வாதாடினார்கள். மீண்டும் அப்பீல் மனு!

பட்டுக்கோட்டை 6-12-45

பட்டுக்கோட்டை ராமபஜனை மடத்தில் நடத்தப்பட்ட ஸ்ரீ ராமநவமி உற்சவத்தில் 23-4-45ந் தேதி கிளர்ச்சி செய்ததாக இவ்வூர் சுயமரியாதை இயக்க தோழரும், இந்தி எதிர்ப்பில் சிறைசென்றவருமான தோழர் பி. ஆர். சாமிநாதன் மீது இவ்வூர் போலீஸ் சப்இன்ஸ்பெக்டரால் [இ. பி. கோ,] 3-செக்ஷன்களில் குற்றஞ்சாட்டி, இவ்வூர் சப்மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தொடரப்பட்டிருந்த வழக்கில் சப்மாஜிஸ்டிரேட் அவர்கள் எதிரியை குற்றவாளி எனக் கண்டு ஒவ்வொரு செக்ஷனுக்கும் 4 மாத கடுங்காவல் தண்டனை வீதம் 3 செக்ஷனுக்கும் தனித்தனியே தண்டனை கொடுத்து தண்டனையைத் தொடர்ந்து அனுபவிக்கவேண்டுமென்று 16-11-45ல் தீர்ப்பு கூறப்பட்டு 17-11-45ல் பட்டுக்கோட்டை டிப்டி கலெக்டர் முன்பு அப்பீல் தாக்கல் செய்யப்பட்டு திருச்சி வழக்கறிஞர் தோழர் டி. பி. வேதாசலம் பி. ஏ., அவர்களும் தஞ்சை தோழர் பி. வேணுகோபால் பி. ஏ., பி. எல்., அவர்களும் வாதாடியதில் 6-12-45ல் டிப்டி கலெக்டர் அவர்களால் 1 வருட கடுங்காவல் தண்டனை குறைக்கப்பட்டு 4-மாதம் கடுங்காவல் தண்டனையாக விதிக்கப்பட்டது.

ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்ய முயற்சி செய்யப்படுகிறது.

## இசைவேளாளர் மாநாடுகள்

சிக்கல் காரனேஷன் ஹாலில் 24-11-45 காலை மாபெரும் ஊர்வலத்திற்குப் பின் தஞ்சை ஜில்லா இசை வேளாளர் மாநாடு துவக்கப்பட்டது.

தோழர் சி. பி. சுப்பையா கொடியேற்று விழாவாற்றினார். தோழர் எஸ். சோமசுந்திரபாரதியார் எம். ஏ., பி., எல். திறப்பு விழா சொற்பெருக்காற்றினார். தோழர் கே. எஸ். பிச்சையப்பா வரவேற்புரைக்குப் பின் மதுரை தோழர் ஆர். கே. சண்முகநாதன் தலைமை தாங்கி சொற்பொழிவாற்றினார். சமூக வித்வமணிகளின் படங்கள் திறக்கப்பட்டன.

பொட்டுக்கட்டும் கொடிய வழக்கத்தை ஒழித்துவிடவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதோடு பல தீர்மானங்கள் நிறைவேறின. தோழர் எஸ். குஞ்சிதம் பி. ஏ., எல். டி., ஆகியோர் சமூக முன்னேற்றம் பற்றி பேசினார்கள். பொதுக் காரியதரிசி தோழர் லெட்சப்பா நன்றி கூறினார்.

மறுநாள் 25-11-45 காலை இசை வேளாளர் இளைஞர் மாநாடு தோழர் லக்ஷ்மிதரன் பாரதி எம். ஏ., பி. எல்., தலைமையில் நடைபெற்றது. தோழர் சி. பி. சுப்பையா மாநாட்டைத் திறந்து வைத்தார். ஜில்லா இளைஞர் கழகம் நிறுவப்பட்டது.

'இளைஞர் எழுச்சி' பற்றி தோழர்கள் எஸ். சோமசுந்தர பாரதியார், எஸ். குஞ்சிதம், மூவலூர் ராமாமிர்தத்தம்மாள், குடந்தை முத்துவேல், சுந்தரராசன், மு. கருணாநிதி, சீனிவாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் கே. சந்தானகிருஷ்ணன் நன்றிகூற மாநாடு முடிவுற்றது.

## தோழர் கே. கே. நீலமேகம்

குடந்தை தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் உடல் நலங்குன்றியிருந்து ஒரு மாதம் ஓய்வு பெற்றுள்ளபடியால் கூட்டங்களுக்கும், விழாக்களுக்கும் அழைப்பு ஏற்றுக்கொள்ள இயலாமைக்கு வருந்துகிறார்.


## விளம்பரம்

சினிமா மெட்டுகளில் அமைக்கப்பட்டதும், தன்மானஇயக்கப் பொதுக்கூட்ட மேடைகளில் பாடுவதற்கு ஏற்ற முறையில் சுமார் 35 பாடல்கள்வரை அமைத்து தயாரிலிருக்கிறது. பேப்பர் கோட்டா இருக்கும், தனிப்பட்டவர்களோ, கம்பெனிகளோ அச்சிட்டு விற்பனை செய்ய விரும்பினால், முழு விபரத்திற்கு கீழ்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்.

T. R. வீரண்ணன்,
C/o N. G. ரெங்கசாமி செட்டியார்,
ஜவுளி வியாபாரம், துறையூர் P. O.
(திருச்சி ஜில்லா)


## திருமணங்கள்

தூத்துக்குடி 9-12-45ல் தோழர் மு. கருத்தக்கண்ணு தலைமையில் நடைபெற்ற துரைசாமி—சீதியம்மாள் வாழ்க்கை ஒப்பந்தத்தை முன்னிட்டு தோழர் எஸ். நடராசன் பேசினார். குடியரசு திராவிடநாட்டுக்கு முறையே 1 ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது.

o o

பொள்ளாச்சியில் 6-12-45ல் கிருஷ்ணா ஜின்னிங் பாக்டரி சொந்தக்காரர் தோழர் கே. கிருஷ்ணசாமி தலைமையில் தோழர் எ. எஸ். பாலசுப்பிரமணியம் சகோதரி பாக்யலட்சுமிக்கும் தோழர் எம். கோவிந்தராஜுவுக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றதின் நினைவாக குடி அரசுக்கு 1 ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

o o

மணப்பாறையில் 23-11-45ல் தோழர் அய்யாசாமி மகள் செல்லம்மாளுக்கும் தோழர் ப்ச்சைமுத்துக்கும் தோழர் டி. பி. வேதாசலம் பி. ஏ., தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்று தோழர்கள் பொன்னம்பல கவுண்டர், அழகிரிசாமி, மணப்பாறை சப்ரிஜிஸ்ட்ரார் ஆகியோர் பேசினர். குடி அரசுக்கு 1 ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது.

o o

கடையநல்லூர் முத்துகிருஷ்ணாபுரத்தில் 28-11-45 அன்று நடைபெற்ற வை. வேலாயுதம், வீரம்மாள் வாழ்க்கை ஒப்பந்தத்தை முன்னிட்டு குடி அரசுக்கு 1 ரூபாய் அன்பளிப்பு தரப்பட்டது.

o o

மீன்சுருட்டியில் நடைபெற்ற கே. சின்னராஜ், சரியம்மாள் வாழ்க்கை ஒப்பந்தத்தில் தோழர்கள் எஸ். கே. சாமி, எம். பி. ரத்தினசாமி, எஸ். கே. பால், ஜி. ஆர். சாமி, தம்புசாமி ஆகியோர் பேசினார்கள்.

o o

பவானியில் 12-11-45ல் நடைபெற்ற எம். எஸ். பழனிசாமி—செல்லம்மாள் வாழ்க்கை ஒப்பந்தத்தின் நினைவாக குடி அரசு, ஜஸ்டிசைட்டுக்கு முறையே 2 ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

o o

போரூரணியில் 25-11-45ல் நிகழ்ந்த கே. அடைக்கலம்—அம்மாகண்ணு வாழ்க்கை ஒப்பந்தத்தை முன்னிட்டு தோழர்கள் வேலாயுதனார், என். பி. காளியப்பன் ஆகியோர் பேசினர்.

o o

மதுரை அழகரடியில் 19-11-45ல் தோழர் பண்டிட் கே. முத்துசாமி தலைமையில் நடைபெற்ற கு. வேலு—பழனியம்மாள் வாழ்க்கை ஒப்பந்தத்தை முன்னிட்டு தோழர்கள் ஆர். ராமச்சந்திரன் [illegible] பழகன் பி. ஏ. (ஆனர்ஸ்) ஆகியோர் பேசினர். குடி அரசுக்கு 1 ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

## மறைவு

நீடாமங்கலம் தோழர் சாமிநாதன் அவர்கள் 12-11-45ல் மறைந்தமை குறித்து 27-11-45ல் முல்லவாசலில் இறுதிக்கடன் நடைபெற்று மூவாயிரம் ஏழைகளுக்கு சாப்பாடு போடப்பட்டதின் நினைவாக குடியரசு திராவிடநாட்டுக்கு முறையே 1 ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

o o

இராமானுசம்புதூர் தோழர் சிவசெங்குவின் தாயார் சிவகாமி அம்மாள் 19-11-45ல் இயற்கை எய்தினார்.

o o

27-11-45ல் தஞ்சை ராமச்சந்திர சிவாஜி காண்டிகே ராவ்சாகேப் இயற்கையெய்தினார்.


டாக்டர் எம். ஐ. என். தயாரிப்பு
மானிட தேகத்திற்குப்
புத்துயிர் தரும்
மூன்று சஞ்சீவிகள்
(80-வருடம் பிரசித்தி பெற்றது)

### 1. ஜெயசஞ்சீவி (டானிக்)

வீரிய சேதாரம், நரம்புத் தளர்ச்சி, இவைகளை குணப்படுத்தி இழந்துவிட்ட இல்லற இன்பமளிக்கும் உயர்ந்த பானகம். புட்டி ஒன்று ரூபாய் 3-4-0.

### 2. நயன ஜீவ தைலம்.

நரைத்த கேசத்தை கருமையாக்கி, கேசம் உதிர்வதை நிறுத்தி, கருத்து, அடர்ந்து, நீண்ட கேசத்தை வளர்க்கும். சிரசு, கண், காது, மூக்கு, தொண்டை இவைகளின் வியாதிகளை நீக்கும் உன்னத தைலம்.

புட்டி ஒன்று ரூபாய் 3-4-0.

### 3. வசந்த கிருதம்.

வீரியத்தை உற்பத்திசெய்து, நசைகளை பலப்படுத்தி, மெலிந்த தேகத்தை புஷ்டியாக்கி, வசீகரமளிக்கும் சிறந்த சஞ்சீவி. புட்டி ஒன்று ரூபாய் 3-8-0.

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:-

1. ஹேல் அண்கோ; கெமிஸ்ட்ஸ்,
1/288, எஸ்பிளனேட் ரோட், சென்னை.

2. சேபே மெடிக்கல் ஸ்டோர்ஸ்,
571, பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, சென்னை.

விபரங்களுக்கு:-

எஸ். ஏ. லாபர்டரி,
8/1 கல்மண்டபம் ரோட்,
[illegible]

# திராவிடநாட்டுச் செய்திகள்

திருவாரூர் தெற்கு வீதி அருணகிரியார் நிலையத்தில் 21-11-45 அன்று தோழர் ஆர். ராசசந்தானம் தலைமையில் இசைவேளாளர் இளைஞர் கழக திறப்பு விழா நடைபெற்றது. தோழர்கள் கே. சந்தான கிருஷ்ணன், எம். சுந்திராசன், வி. சிவப்பிரகாசம், டி. எஸ் தியாகராச ஞானியார், முத்துவேல் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். தோழர் செல்வராசு நன்றி கூறினார்.

கோபியில் 18-11-45ல் கூடிய மருத்துவர் சங்க நிர்வாகக் கமிட்டியில் தோழர் ஜி. கே. காளியப்பனுக்குப் பதிலாக தோழர் ஜி. எ. வெங்கடாசலத்தை காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

சிங்கநல்லூர் ஆதிதிராவிட வாலிபர் சங்க 10 வது ஆண்டு விழா 20-11-45ல் தொழர் ஜி. கே. சுந்திரம் தலைமையில் நடைபெற்றது.

சென்னை அலெக்சாண்டர் லைனில் தோழர் முருகேச பாகவதர் தலைமையில் லோகநாயகி அம்மை மறைவுக்காக நடந்த இரங்கற்கூட்டத்தில் தோழர்கள் அன்பழகன், தமிழ்ஒளி, ஜெகநாதன் ஆகியோர் பேசினர்.

வெளிப்பாளையத்தில் 18-11-45-ல் பைந்தமிழ் இளைஞர் கழக கூட்டத்தில் புலவர் அரங்கநாதன் தலைமையில் புலவர் வி. அ. அரங்கசாமி 'கலையும் வாழ்வும்' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றினார்.

வளையாம்பட்டில் 25-11-45 அன்று தோழர் காட்டாண்டிமை குப்புசாமி தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழக பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஆ. திராவிடமணி, வீரமணி ஆகியோர் பேசினார்கள்.

கள்ளக்குறிச்சியில் 26-11-45 தோழர் வாசுதேவன் தலைமையில் நடந்த கூட்டத்தில் பெரியார் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது, தோழர்கள் திராவிடமணி வீரமணி ஆகியோர் பேசினார்கள்.

மன்னார்குடி இசைவேளாளர் இளைஞர் கழக திறப்பு விழா 22-11-45-ல் தோழர் எம். சுந்தரராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் முத்துவேல், சுந்தரம் பிள்ளை, சாரங்கன், ஜெகநாதன், சுந்தரேசன், கோவிந்தராசலு முதலியோர் பேசினர். தமிழிசைக் கலை இளைஞர் தோழர் டி. வி. நமசிவாயம் கிருஷ்ணன் நன்றிகூற முடிவுற்றது.

மோகனூர் தேவேந்திரகுல இளைஞர் சங்கத்தின் சார்பாக 10-11-45 முதல் தோழர்கள் மலையாளன், ராமசாமி, பெரியசாமி, ஆறுமுகம்' வீரப்பன் முதலியோர் பல கிராமங்களில் சமூக சீர்திருத்தம் பற்றி சொற்பொழிவாற்றினர்.

நாமக்கல் அருந்ததியார் வாலிபர் சங்கத்தின் கூட்டம் 5-11-45-ல் தோழர் குப்புசாமி தலைமையில் நடைபெற்று பலர் சொற்பொழிவாற்றியதோடு நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

மணத்தட்டை தாழ்த்தப்பட்டோர் சங்கத்தின் பொதுக் கூட்டம் 28-10-45-ல் தோழர் மருதமுத்து தலைமையில் நடைபெற்று பல தீர்மானங்கள் நிறைவேறின.

கோலார்தங்கவயல் சமரசஷெடியூல்டு வகுப்பார் கழக கமிட்டிக் கூட்டம் 28-10-45-ந் தேதி தோழர் எ. எஸ். ராசு தலைமையில் கூடியது.

சென்னை மாணவர் மன்றத்தின் 14ம் ஆண்டு விழா 18-11-45 மாலை புலவர் வரதராசனார் எம். ஒ. எல். தலைமையில் நடந்தது. பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பம்பாய் தென்னிந்திய ஆதிதிராவிட மகாஜன சங்க சார்பில் 15, 17, 18 தேதிகளில் நடந்த கூட்டங்களில் தோழர் கிருஷ்ணானந்தா பேசினார்.

அவலூர் பேட்டை திராவிடர் கழக ஆண்டுவிழா 4-11-45-ல் தோழர் ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. திருச்சி மாநாட்டுத் தீர்மானம் ஆமோதிக்கப்பட்டு தோழர் கே. என். இளஞ்செழியனைத் தலைவராகவும், செ. பெ. மல்லிகார்ச்சுனனை செயலாளராகவும் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஆயம்பாடி அஞ்சுமன் சுபானுல் முஸ்லீம் சங்கத்தின் 7-ம் ஆண்டு விழா 16-11-45-ல் தோழர் கே. முகம்மது இபுராகிம் தலைமையில் நடைபெற்றது.

o o

நிலக்கோட்டை தாலுக்கா டி. வாடிப்பட்டி சென்டர் ஆரம்ப ஆசிரியர் சங்க கூட்டம் தோழர் ஆசிரியர் ஆண்டி அய்யா தலைமையில் நடைபெற்றது.

o o

கும்பகோணம் கிளை தஞ்சை ஜில்லா வள்ளுவர் இன சீர்திருத்த சங்கத்தின் சார்பில் 25-11-45 மாலை தோழர் குருசாமி தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர் வி. ராமச்சந்திரன் விளம்பர அதிகாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

o o

குளித்தலையில் 19-11-45-ந் தேதி தோழர் எ. பி. ஜயராமன் தலைமையில் நகர மக்களின் சார்பாகவும் தமிழ் மாணவர் கழக சார்பாகவும் புரட்சிக் கவி பாரதிதாசன் அவர்கட்கு வாழ்த்திதழ்கள் வாசித்தளிக்கப்பட்டதோடு புரட்சிக் கவி நிதிக் கமிட்டியின் சார்பாக ஒரு பண முடிப்பும் கொடுக்கப்பட்டது. தோழர் புலவர் ரங்கசாமி, நெடுஞ்செழியன், ஜனார்த்தனம், ராஜாசோழகர் முதலியோர் பேசினர்.

o o

திருமங்கலத்தில் 24-10-45-ல் தோழர் ராமசாமி தலைமையில் பெரியார் பிறந்த நாள் கொண்டாடப்பட்டு தோழர்கள் நெடுமாறன், வீரமுத்து, எஸ். எஸ். மணி, நெடுஞ்செழியன் பி. எ. (ஆனர்ஸ்) பேசினார்கள்.

o o

ஈரோடு மருத்துவர் சங்கக்கூட்டம் 4-12-45ல் நாயக்கர் சத்திரத்தில் தோழர் மு. கருணாநிதி தலைமையில் நடைபெற்று தோழர்கள் தவமணிராசன், ரங்கசாமி, பெருமாள், கருமலைசாமி, கருப்பையா, ராமசாமி ஆகியோர் பேசினர். கருங்கல்பாளையம் வேலுசாமியை சுப்ரமண்யர் கோயிலில் சிலவணிகத் தோழர் அவமதித்ததை கண்டிக்கப்பட்டது.


## தமிழர் தன்மதிப்புப் பாடல்கள்

(புதுவைச் சிவம் எழுதியது)

இது நாட்டுப்பகுதி, சாதிபேதப் பகுதி, மாதர் பகுதி, மதப்பகுதி, கலைப் பகுதி, மூடவழக்கப்பகுதி, தொழிலாளர் பகுதி, வேண்டுகோட்பகுதி, திராவிடப்பகுதி,பெரியார் பகுதி எனப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியும் பல இனிய எளிய மெட்டுக்களில் ஆக்கப்பட்ட பாடல்களைக்கொண்டது.

தமிழர்க்குத் தன்மான உணர்ச்சியையும்,

தொழிலாளர்க்கு எழுச்சியையும் உண்டுபண்ணுவது! விலை அணா 6.

தனிப்புத்தகம் வேண்டுவோர் 7-அணா ஸ்டாம்பு அனுப்புக.

ஏஜண்டுகட்கு 25.|· கமிஷன் தரப்படும். தேவைக்கு எழுதுக.

கிடைக்குமிடம்:

ஞாயிறு நூற்பதிப்பகம்,

28, அம்பலத்தாடு ஐயர் மடத்துத் தெரு, புதுச்சேரி. (F.I.)

# கருணை! கருணை!!

## தமிழகம் கதறுகிறது - கண்ணீர் விடுகிறது!

—‡—

(கீழ்க் கண்ட இடங்களில் நடைபெற்ற கிருஷ்ணன்—பாகவதர் விடுதலை முயற்சிக் கூட்டங்களில் தமிழ்மணிகள், நகைச்சுவை அரசு N. S. கிருஷ்ணன், இசை உலக ஒளி M. K. தியாகராச பாகவதர் இருவரையும் கருணை காட்டிவிடுதலை செய்யுமாறு அரசாங்கத்தாரை கேட்டுக் கொள்வதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.)

★

27-11-45 வேலூரில் தோழர் வி. டி. நடராச முதலியார் தலைமையில் நடந்த திராவிடர் கழகக் கூட்டம்.

o o

விருதுநகர் திராவிட புனருத்தாரண சங்கத்தின் சார்பில் 23-11-45ல் தோழர் சண்முகம் தலைமையில் நடந்த கூட்டம்.

o o

நாகை விஸ்வகுல தொழிலாளர் சங்கத்தில் 22-11-45ல் நடந்த கூட்டம்.

o o

20-11-45 அருப்புக்கோட்டை சைவ பானு க்ஷத்திரிய உயர்தர வித்தியாசாலை மானேஜிங் கமிட்டியின் சார்பாக நடந்த கூட்டம். வைஸ்ராய், கவர்னருக்கும் தந்தி வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

o o

17-11-45ல் ஆயம்பாடி அட்சுமன் சபாலுல் முஸ்லிம்லீக் சங்க ஆண்டுவிழா கூட்டம்.

o o

விருதுநகர் விஸ்வகர்மா மக்கள் பூரண ஹர்த்தாலுடன் கூடிய, தோழர் தங்கவேல் தலைமையில் நடந்த நவம்பர் 30-ந் தேதிய கூட்டம்.

o o

சேலம் செவ்வாய்ப்பேட்டையில் 26-11-45-ல் தோழர் நாராயணசாமி ஆச்சாரி தலைமையில் நடந்த விஸ்வகுல வாலிபர் சங்கக் கூட்டம்.

o o

நாகர்கோயில் ஸ்ரீராம் டாக்கீசில் தோழர் வி. எஸ். கிருஷ்ணன் பி. ஏ., பி. எல்., எம். எல். ஏ. தலைமையில் 26-11-45-ல் நடந்த பொது மக்கள் கூட்டம்.

o o

கன்யாகுமரியில் 27-11-45ல் தோழர் பி. தேவசகாயம் தலைமையில் நடைபெற்ற கூட்டம்.

o o

அருப்புக்கோட்டை விஸ்வகுல ஆபரணத் தொழிலாளர் சங்க சார்பில் 25-11-45ல் தோழர் ராக ஆச்சாரியார் தலைமையில் நடந்த கூட்டம்.

o o

பம்பாய் தாராவியில் திராவிட நாடு பகுத்தறிவு நிலையத்தின் சார்பில் 28-11-45 தோழர் கே. கே. சண்முகவேல் சேட் தலைமையில் நடந்த கூட்டம். வைஸ்ராய், கவர்னருக்கும் தந்தி மூலம் தெரிவிக்கப்பட்டது.

o o

கும்பகோணம் விஸ்வகர்ம மாணவர் கல்வி நிதி சகாய சங்க சார்பில் 29-11-45ல் தோழர் பூபதி ஆச்சாரியார் தலைமையில் நடந்த கூட்டம்.

o o

தேவாரம், தேசிய வாலிபர் சங்க மாஜி செயலாளர் தோழர் ஆர். வி. சாமி முயற்சியால் தேசிய வாலிபர் சங்கம், கம்பர் கழகம், திராவிடர் கழகம், முக்குலத்தோர் சங்கம், வித்யாலயா மாணவர்கள், ஆர்ய வைஸ்யபாலர் சங்கம் சை. வாலிபர் சங்கம் தேவாங்க வாலிபர் சங்கம், ஜவுளி வர்த்தகர் சங்கம், தேசிய வாலிபர் சங்க கிளை, ஆகிய சங்கங்களில் சார்பில் நடந்த கூட்டம்.

o o

திருவையாறு 30-11-45ல் தோழர் எம். சொக்கலிங்க பத்தர் தலைமையில் நடந்த விஸ்வகர்ம சங்க கூட்டம்.

o o

ஆரணி விஸ்வகர்ம சங்க சார்பில் நடந்த கூட்டம். வைஸ்ராய் கவர்னருக்கு தீர்மானம் அனுப்பப்பட்டது.

o o

ஆரணி காந்தி வாலிபர் சங்க சார்பில் 25-11-45ல் நடந்த கூட்டம்.

o o

நீடாமங்கலத்தில் தோழர் கே. நடராச பிள்ளை தலைமையில் 23-11-45ல் சுயமரியாதை சங்கம், விஸ்வகர்ம இளைஞர் மன்றம், பிரைமரி முஸ்லிம் லீக், திராவிடர் கழகம், வர்த்தக காரியஸ்தர் சங்கம், மருத்துவகுல சங்கம் ஆகியவற்றின் சார்பில் கூடிய பொதுக்கூட்டம்,

o o

தஞ்சையூர் விஸ்வகர்ம மகாஜன சங்கத்தின் சார்பில் 22-11-45ல் தோழர் நாராயண பத்தர் தலைமையில் நடந்த பொதுக்கூட்டம்.

o o

திருத்துறைப்பூண்டி விஸ்வ பிராமண சங்கத்தில் 20-11-45ல் மு. செல்லப்பா ஆச்சாரி தலைமையில் நடந்த கூட்டம்.

o o

பவானி தமிழர் கழகத்தில் 22-11-45ல் தோழர் எம். எஸ். பழனிசாமி தலைமையில் நடந்த விசேடக் கமிட்டிக்கூட்டம்.

o o

பெங்களூர் திராவிட வாலிபர் கழக சார்பில் 25-11-45ல் தோழர் எஸ். கே. சாமுவேல் தலைமையில் நடந்த கூட்டம்.

o o

சாத்துக்குடி விஸ்வகர்ம தொழிலாளர் சங்க சார்பில் 29-11-45ல் தோழர் கே. என். தங்கவேலு தலைமையில் நடந்த கூட்டம்.

o o

பட்டுக்கோட்டை விஸ்வகர்ம மகாஜன சங்க ஆதரவில் தோழர் கே. சிரங்க பத்தர் தலைமையில் 30-11-45ல் நடந்த கூட்டம்.

o o

பெண்ணாகடம் விஸ்வகுல மக்கள் ஆதரவில் 30-11-45ல் நடந்த பொதுக் கூட்டம்.

o o

கோவை ஜில்லா விஸ்வகர்ம மகாஜன வாலிப சங்கத்தின் ஆதரவில் 23-11-45ல் தோழர் எம். என். வயிரவாச்சாரியார் தலைமையில் நடந்த கூட்டம்.

o o

மதுரை விஸ்வகலாநிலைய விஸ்வகுல வாலிபர் சங்க சார்பில் 4-12-45ல் தோழர் எம். எஸ். தாமோதரராவ் தலைமையில் நடந்த கூட்டம்.

o o

மன்னார்குடி விஸ்வகர்ம மகாஜன சபாவின் ஆதரவில் 30-11-45ல் தோழர் டி. எஸ். விஸ்வநாத பத்தர் தலைமையில் நடந்த கூட்டம்.

o o

சென்னை செகரட்டரி, சென்னை கவர்னர் வைஸ்ராய் ஆகியோருக்கு தீர்மானங்களை அச்சியற்றி அனுப்பப்பட்டன.

o o

காமகிரிப்பேட்டை விஸ்வகர்ம சங்கத்தில் 30-11-45ல் நடைபெற்ற கூட்டம்.

o o

கும்பகோணம் விஸ்வபிர்ம பஞ்சாயத்து சபை மீனாட்சி சுந்தரேஸ்வர வாசகசாலை உலோகத்தொழிலாளர் வித்யாசாலை இவைகளின் சார்பில் தோழர் கே. பூபதி ஆச்சாரி தலைமையில் 30-11-45ல் நடந்த கூட்டம்.

o o

தாத்தய்யங்கார் பேட்டையில் 4-12-45ல் திராவிடர் கழக சார்பில் தோழர் பி. வி. பி. சுப்ரமணியம் தலைமையில் நடந்த கூட்டம்.

o o

வடஆற்காடு திருப்பத்தூர் திராவிட மாணவர் கழக சார்பில் சென்னை கவர்னருக்கு தந்தி செய்தி அனுப்பியுள்ளதாக கழக தலைவர் வி. முருகேசன் அறிவிக்கிறார்.

• •

சாத்துக்குடி அருந்ததியார் சமுகசீர் திருத்த சங்கத்தில் 26-11-45ல் தோழர் பே. க. சாத்தமுத்து தலைமையில் நடந்த கூட்டம்.

0 0

பெரம்பூர் செம்பியம் ஆதிதிராவிட கல்வி அபிவிருத்தி கழக சார்பாக 25-11-45ல் தோழர் சத்தியவாணிமுத்து தலைமையில் நடந்த கூட்டம்.

0 0

சேலம் டவுன் அம்மாபேட்டை பொதுமக்கள் சார்பில் தோழர் எம். ஆர். சித்தையன் தலைமையில் 2-12-45ல் நடந்த கூட்டம்.

0 0

தாராபுரம் விஸ்வபிராமண கூட்டுறவு நல்வாழ்க்கை சங்கசார்பில் 21-11-45ல் தோழர் வடிவேல் பிள்ளை தலைமையில் நடந்த கூட்டம்.

0 0

திருக்கோவிலூர் விஸ்வபிராமணர் மகாஜன சங்கசார்பில் 20-11-45ல் நடைபெற்ற கூட்டம்.

0 0

திருச்சி மருத்துவர் சங்கத்தில் 10-11-45ல் தோழர் கே. கணபதி தலைமையில் நடந்த கூட்டம்.

0 0

இராமலிங்கம்பட்டி பாரதி படிப்பக சார்பில் தோழர் கா. அ. ஆறுமுகனார் தலைமையில் 2-12-45ல் நடைபெற்ற கமிட்டிக்கூட்டம்.

0 0

இராஜபாளையம் விஸ்வபிர்மசங்க நிர்வாக கமிட்டி சார்பில் 30-11-45ல் தோழர் எஸ். கணபதி ஆச்சாரி தலைமையில் நடந்த கூட்டம்.

0 0

திருவனந்தபுரம் 25-11-45ல் தோழர் வி. எஸ். கிருஷ்ணபிள்ளை பி. ஏ., பி. எல்., எம். எல். ஏ., தலைமையில் நடந்த பொதுக்கூட்டம்.

0 0

திருசெங்கோட்டில் 30-11-45ல் உண்மைநாடுவோர் சங்க சார்பில் நடந்த பொதுக்கூட்டம். சென்னை கவர்னருக்கு திருச்செங்கோடு தாலூகா மக்களால் மகஜர் ஒன்றும் அனுப்பப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

0 0

நாமகிரிப்பேட்டையில் 30-11-45ல் தோழர் சுப்ரமணிய ஆச்சாரி தலைமையில் நடந்தகூட்டம்.

0 0

சேலம் ஜில்லா விஸ்வகர்ம மகாஜன சங்க சார்பில் 30-11-45ல் தோழர் புருடோத்தம ஆச்சாரியார் தலைமையில் நடந்த கூட்டம்.

0 0

திருத்துறைப்பூண்டி விஸ்வபிராமண தொழிலாளர் சங்க சார்பில் 30-11-45ல் தோழர் கோவிந்தசாமி பத்தர் தலைமையில் நடந்த கூட்டம்! டை தாலுக்காவில் கிராமவாரியாக விஸ்வகர்ம தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யப்பட்டது.

0 0

சோழவந்தான் விஸ்வகர்ம தொழிலாளர் சங்க சார்பில் 30-11-45ல் தோழர் சோமசுந்தரம் ஆச்சாரியார் தலைமையில் நடந்தகூட்டம்.

* *

அருப்புக்கோட்டை திராவிடர் கழக கூட்டம் 6-12-45ல், வைஸ்ராய், சென்னை கவர்னர் ஆகியோருக்கு தெரிவிக்கப்பட்டது,

0 0

நாட்டறம்பள்ளியில் 9-12-45ல் தோழர் வெங்கட்டராமன் தலைமையில் நடந்த திராவிடர் கழக அங்கத்தினர் கூட்டம்.

0 0

பொன்மலையில் 30-11-45ல் தோழர் பரமசிவம் தலைமையில் நடைபெற்ற திராவிட வாலிபர் கழக கூட்டம்.

0 0

புலிவலத்தில் 29-11-45ல் தோழர் எம். எம். தாஜுது தலைமையில் நடந்த திராவிடர் கழக கூட்டம்.

0 0

கோவையில் 11-2-45ல் தோழர் வேலாசாமி தலைமையில் நடந்த திராவிட வாலிபர் கழக கூட்டம்.

0 0

திருச்செங்கோட்டில் 4-12-45ல் தோழர் வெங்கிட்டு ஆச்சாரியார் தலைமையில் நடைபெற்ற பொன் வேலைத் தொழிலாளர் கூட்டம்.

* *

திண்டிவனத்தில் 2-12-45ல் தோழர் வெங்கடேசன் தலைமையில் நடந்த திராவிட மாணவர் கழக கூட்டம்.

* *

திருவத்திபுரத்தில் 9-12-45ல் தோழர் டி. பி. வேதாசலம் பி. ஏ. தலைமையில் நடந்த வட. ஆர்காடு மாவட்ட திராவிடர் கழக முதல் மாநாடு.

0 0

7-12-45 செய்யார் விஸ்வபிராமண சம்மேளனத்தில் தோழர் டி. வி. பெரியசாமி ஆச்சாரி தலைமையில் நடந்த கூட்டம்.

* *

திலக்கோட்டை பஞ்சாயத்து போர்டு தலைவர் தோழர் அங்கண பத்தர் தலைமையில் 30-11-45ல் கூடிய பொதுக் கூட்டம்.

* *

கோலார் தங்கவயலில் 3-12-45ல் தோழர் உரிகம் டி. கே. பெருமாள் தலைமையில் நடைபெற்ற திராவிட வாலிபர் கழக ஆரம்பவிழா கூட்டம்.

* *

லால்குடி விஸ்வகுல சங்கத்தில் 4-12-45 மாலை தோழர் உலகநாதாச்சாரி தலைமையில் நடந்த கூட்டம்!

## திருவிதாங்கூர் கிருஷ்ணன்— பாகவதர் விடுதலைக் கமிட்டி

அகில திருவிதாங்கூர் கிருஷ்ணன் பாகவதர் விடுதலைக் கமிட்டியொன்று 23-11-45ல் நிறுவப்பட்டு அதற்கு தோழர் வி. எஸ். கிருஷ்ண பிள்ளை பி.. ஏ., பி. எல்., எம். எல். ஏ., அவர்களைத் தலைவராகத்தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. தலைவர் அவர்கள் முயற்சியால் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் பல பாகங்களில் கூட்டங்கள் கூட்டி கிருஷ்ணன் பாகவதர் விடுதலை கோரி கருணை மனுக்கள் சென்னை சர்க்காருக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

## சென்னை ஜில்லா திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) நிர்வாகக் கமிட்டிக் கூட்டம்

மேற்படி கமிட்டியின் அவசரக் கூட்டம் ஒன்று 28-11-45 மாலை 6-30 மணிக்கு பொம்மு செட்டித் தெரு 11-வது மாடியில் துணைத் தலைவர் தோழர் டி. ஏ. எஸ். சாமி தலைமையில் நடைபெற்றது. 39 நிர்வாக உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

திருச்சி மாகாண மாநாட்டின் தீர்மானத்திற்கு விரோதமாக தேர்தல் வேலையில் ஈடுபட்டுவரும் நிர்வாக உறுப்பினர் தோழர் சி. பத்மநாபன், ஜில்லாக் கமிட்டியின கேள்விக் கடிதத்திற்கு எவ்விதமான பதிலும் கூறாதிருப்பதோடு மேலும் தேர்தல் வேலையில் ஈடுபட்டு வருவதால், இன்று முதல் 3 ஆண்டுகளுக்கு அவர் திராவிடர் கழக [ஜஸ்டிஸ் கட்சியில்] உறுப்பினராக யிருத்தல் கூடாதென்பதுடன், அவர் வகித்துவரும் முத்தியாலுப்பேட்டை டிவிஷன் கழகத் தலைவர் பதவியையும் ரத்து செய்து வேறொரு தலைவரை டிவிஷன் கழகத்தார் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

வடசென்னை திராவிடர் கழக நிர்வாக உறுப்பினர் தோழர் டி. ஜி. கிருஷ்ணசாமி தேர்தல் கூட்டங்களில் பேசி வருவதாகத் தெரிவதால் அந்த டிவிஷன் நிர்வாகக் கமிட்டியினர் இது பற்றி விசாரித்து ஜில்லா கமிட்டிக்கு ரிபோர்ட் அனுப்புமாறு தீர்மானிக்கப்பட்டது.

சுந்தரப்பெருமாள் கோயிலில் செங்குந்த இளைஞர் கழக சார்பில் தோழர் ம. கணபதி தலைமையில் 4-12-45ல் நடைபெற்ற கூட்டம்.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42; Cutchery street, ERODE.

ரோஜா முத்தையா